**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**Field Work Centre**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2016**
**Term Examination, March - 2016**

FWC

| தரம் :- 13 (2016) | தமிழ் - I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :-

**பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி - I

**01) மேல்வரும் செய்யுட்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

(i) கருங்கால் வேம்பின் ஓண்பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட்டதவத்
தெழு குளிறு மிதித்த ஒரு பழம் போலக்
குழைய கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென்றவ்வே

(அ) இச்செய்யுளின் பொருளை இக்கால மொழிநடையில் எழுதுக.

(ஆ) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள அணிச் சிறப்பினை எடுத்துக்காட்டி விளக்குக.

(இ) இச்செய்யுளில் முதல், கரு, உரிப் பொருட்கள் வெளிப்படுமாற்றை எடுத்துக் காட்டுக.

(ஈ) இச்செய்யுளில் தலைவி வருந்துவதற்கான காரணம் என்ன?

(ii) அரிந்தான் முன்னோர் மன்னவ னன்றே யருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வர நல்கிப்
பரிந்தா லென்னா மென்றனள் பாயுங் கனலேபோ
லெரிந்தாறாதே யின்னுயிருண்ணு மெரி யன்னாள்

(அ) இச்செய்யுளில் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

(ஆ) இச்செய்யுளில் குறிப்பிடப்படும் தசரதனுக்கு முந்திய சூரிய வம்ச அரசன் யார்? அவனது செயற்பாடு என்ன?

(இ) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள அணியினை எடுத்துக்காட்டி விளக்குக.

(ஈ) இப்பாடலில் கைகேயி பற்றிய உமது மன எண்ணத்தினை விளக்கிக் கூறுக.

02) ‘அ’ பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

‘ஆ’ பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) கீழ்த் திசையின் இருட்கீறி கிளர் உஷை நுதலில்
கிளிமூக்கு நிறப்பொட்டுத் தீட்டும் கிரணன்
ஆழ்கடலின் அலைகளிடம் ஆடல் கற்றேன்
அனற் சுவாலை இடத்தோடி அருளும் காற்று
வீழ் புனலில் ஏழ் வர்ணம் விளைத்து புலத்தை
விளைவேற்றி வினையின் திறம் விளம்பும் நதிகள்
சூழ் மதுவை விருந்தீந்து சுரும்பு பாட
சுகம் தத்தை தூவு குளிர் சோலை மலர்கள்

அந்தரத்தே இருட்சாணம் மெழுகி உடுவாம்
அரும் புள்ளிக் கோலமிடும் அந்திவானம்
விந்தையதாம் வேழம் என விண்ணில் பறந்து
வெண்முத்து நேர் திவலை சிந்தும் மேகம்
செந்துளிராம் புல் நுனியின் வைரச் சிரிப்பை
தெளித்து ரவி அணைப்பினிலே சேர் பனித்துளிகள்
சுந்தரமாய் காதலர்கள் தூக்கம் நீங்கி
சொல்லாட தூண்டவரும் சோதி மயம்

மண் உழுது பொன் நெல் தரும் தாய் நேர் உழவர்
மானமொடு வாழக் கலை நெய் கைகோளர்
விண்ணதிர முரசார்த்துப் பகைமை வீழ்த்தி
வெற்றியின் சங்கூதுகின்ற யுத்த வீரர்
கண் துயிலை நேர் மரணம் கண்ணின் விழிப்பு
காட்சி நிகர் ஜனனம் மொழி காக்கும் கவிஞர்
உண்மை என உள்ளதெனும் தெய்வம் இந்த
உலகதனைப் படைக்க முதலுற்றதென தொழிலே

தொழில் இன்றேல் அழிவாகும் அழிவதும் தொழிலே
தொழிலில்லா இடமில்லை சுதந்திரம் தொழிலே
அழகில்லா ஒன்றினை அழகாக்கும் தொழிலே
அச்சமில்லா உச்சிதத்தின் ஆக்கம் தொழிலே
அழிவில்லா பெருமையதன் கருத்து தொழிலே
காலத்தால் களங்கமுறா கற்புத் தொழிலே
தொழிலாளர் ஓங்கிடுக அவர் பசிதுடைக்க
தொண்டாற்றல் நமது தொழில் கவிதைத் தொழிலே

(i) இச்செய்யுளில் கவிஞர் யார் யாரை தொழிலாளர் எனக் குறிப்பிடுகின்றார் என்பதை தெளிவுபடுத்துக.

(ii) தொழிலின் முதன்மை பற்றி கவிஞர் கூறுவனவற்றைத் துலக்குக.

(iii) தொழிலாளர் தொடர்பாக சமூகம் ஆற்றவேண்டிய பணிகள் எவை?

(iv) இச்செய்யுளில் இடம் பெறுவனவற்றுள் இரண்டு உருவக அணிகளையும் இரண்டு உவமை அணிகளையும் எடுத்துக் காட்டுக.

(ஆ) கண்களை மூடித்திறக்கிறாள் அகலிகை பிரக்ஞை தெரிகிறது.
சாப விமோசனம்! சாப விமோசனம்.

தெய்வமே! மாசு பட்ட இந்தத் தசைக்கூட்டம் பவித்திரம் அடைந்தது. தனக்கு மறுபடியும் புதிய வாழ்வை கொடுக்க வந்த தெய்வீக புருஷன் எவன்? அந்தக் குழந்தையா?

அவன் காலில் விழுந்து நமஸ்கரிக்கிறாள். ராமன் ஆச்சரியத்தால் ரிஷியைப் பார்க்கிறான்.

விசுவாமித்திரருக்கு புரிந்து விட்டது. இவள் அகலிகை. அன்று இந்திரனுடைய மாய வேஷத்திற்கு ஏமாறிய பேதை. கணவன் மீதிருந்த அளவுக்குள் அடங்காத பாசத்தின் விளைவாக தன் உடம்பை மாய வேஷத்தால் ஏமாறி, மாசுபடுத்திக் கொண்டவள். கோதமனின் மனைவி. அவ்வளவையும் இராமனிடம் சொல்கிறார். அதோ நிற்கும் புற்று இருக்கிறதே; அதில் வலை முட்டையில் மோனத் தவங் கிடக்கும் பட்டுப் பூச்சி போல தன்னை மறந்து நிஷ்டையில் ஆழ்ந்து இருக்கிறான். அதோ அவனே எழுந்து விட்டானே.

நிஷ்டை துறந்த கண்கள் சாணை தீட்டிய கத்தி போல் சுருள்கின்றன. உடலிலே காய கற்பம் செய்தது போல் வலு பின்னிப் பாய்கிறது. மிடுக்காக பெண்ணின் கேவலத்திலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாதவன் போல தயங்கித் தயங்கி வருகின்றான்.

மறுபடியும் இந்தத் துன்ப வலையா? சாப விமோசனத்திற்கு பிறகு வாழ்வு எப்படி என்பதை மனசு அப்பொழுது நினைக்கவில்லை. இப்பொழுதோ அது பிரமாண்டமான மதிலாக அவனது வாழ்வை சுற்றியே மண்டலிக்கின்றது. அவள் மனமும் மிரளுகின்றது.

(i) அகலிகை, கோதமன் ஆகியோரின் மனநிலை பற்றி நீர் கூறுவது என்ன?
(ii) "பெண்ணின் கேவலத்திலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாதவனைப் போல தயங்கித் தயங்கி வருகின்றான்" இதன் ஊடாக ஆசிரியர் கூறவந்த செய்தி என்ன?
(iii) இவ்வுரைப் பகுதியில் இடம்பெறும் உவமையணிகளில் இரண்டினை எடுத்து விளக்குக.
(iv) பின்வரும் வட சொற்களுக்கான தமிழ்ப் பதங்களைக் கூறுக.
விமோசனம், பவித்திரம், நிஷ்டை, காயகற்பம் (16 புள்ளிகள்)

## பகுதி - II

03) **வினைத்தூய்மை** என்ற அதிகாரத்தில் திருவள்ளவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.
(அ) வினைத்தூய்மை என்றால் என்ன? அதன் சிறப்பு
(ஆ) பழியும் பாவமுந் தரும் செயல்களை செய்யாமை
(இ) வினைத் தூய்மைக்கான காரணம்
(ஈ) வள்ளுவர் உவமையணியினைக் கையாளும் சிறப்பு (20 புள்ளிகள்)

04) சிலப்பதிகாரம் **துன்பமாலை** என்ற காதையில் மேல்வருவனவற்றை விளக்குக.
(அ) கோவலன் வருகை தாமதமடைந்தமை குறித்து கண்ணகி அடைந்த துன்பம்
(ஆ) கோவலன் கொலையுண்ட செய்தி அறிந்து கண்ணகி அடைந்த சீற்றம்
(இ) இக்காதையில் வரும் கண்ணகியின் குணப்பண்புகள்
(ஈ) கோவலன் குற்ற மற்றவன் என்பதற்கு நீர் காட்டும் நியாயங்கள் (20 புள்ளிகள்)

*05)* கைகேயி சூழ்வினைப் படலத்தில் தசரதன் கைகேயியின் காலில் வீழ்ந்து இரங்குதல் முதல் தசரதன் கைகேயியிக்கு வரத்தை கொடுத்தது வரையுள்ள பகுதியில்,

(அ) தசரதன் இராமன் மீது கொண்ட பரிவு

(ஆ) கைகேயியின் கொடுந்தன்மை

(இ) கைகேயியை தசரதன் பழித்துக் கூறியவை

(ஈ) தசரதனை கைகேயி பழித்துரைத்தமை

என்பன புலப்படுமாற்றினை தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

*06)* செ. கணேசலிங்கனின் நீண்ட பயணம் என்ற நாவலில்

(அ) தாழ்த்தப்பட்ட மக்களின் அவலங்கள்

(ஆ) உயர் சாதியினரின் இழிவான நடத்தைகள்

(இ) தாழ்த்தப்பட்ட மக்கள் அரசியலை ஆயுதமாகப் பயன்படுத்தும் திறன்

(ஈ) ஆசிரியர் கையாண்ட மொழிநடைச் சிறப்பு

என்பன வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக. (20 புள்ளிகள்)

*07)* விபுலானந்த அடிகளாரின் **பாரதி பாடல்** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) கவிதையின் ஆற்றல் பற்றி அடிகளார் கூறுவதை எடுத்துக் காட்டுக.

(ஆ) பாரத நாட்டின் பெருமை எவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது என்பதை கூறுக.

(இ) கண்ணன் பாட்டில் அடிகளார் ஈடுபட்டமைக்கான காரணங்கள் எவை?

(ஈ) அடிகளாரின் மொழி நடைச் சிறப்பினைத் துலக்குக. (20 புள்ளிகள்)

***08)* மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**

(அ) தேம்பாவணி பைதிரம் நீங்கு படலத்தில் திருக்குடும்பத்தினர் எருசலேம் நகரை விட்டு நீங்கியமை தொடர்பாக இயற்கையின் இரக்கம்.

(ஆ) யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பாடலில் வரும் மனித விழுமியக் கருத்துக்கள்

(இ) வெறும் சோற்றுக்கே வந்தது என்ற சிறுகதையில் வள்ளியின் சிறகொடிந்த வாயிழந்த நிலை

(ஈ) இன்று உனக்கும் சம்பளமா? என்ற கவிதையில் ஆசிரியர் ஒருவரின் வறுமைத் துயரம்

(20 புள்ளிகள்)